# தர்ம வாஹினி

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 8

மனித வாழ்வை ஒழுங்குபடுத்தும் ஆசிரமங்கள் நான்கு. பிரம்மச்சாரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பவைகளே அந்த நான்கும். இவைகள் எல்லாம் கிருஹஸ்தாசிரமத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவைகளே. ஆக, குடும்பத் தலைவனே உத்தமன். காற்றைச் சுவாசித்தே உயிரினங்கள் வாழ்கின்றன. அதுபோல கிருஹஸ்தனின் ஆதரவுடன்தான் மற்ற மூன்று ஆசிரமங்களை அநுசரிப்பவர்கள் வாழவேண்டி இருக்கிறது. இந்த மூன்று ஆசிரமங்களை அநுசரிப்பவர்களுக்கு, உணவளிப்பது மட்டுமின்றி, வேதாத்யாயனம் செய்விப்பதும் குடும்பத் தலைவனின் வேலையே. மனுவும்கூட இதையே தன்னுடைய தர்ம சாஸ்திரத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார். தன் தர்மத்தைத் தவறாமல் மேற்கொள்ளும் கிருஹஸ்தனுக்குக் கூட மோட்சம் கிட்டும் என்று கூறியிருக்கிறார்.

அறவழியை எந்த ஆசிரமத்தை அநுசரிப்பவர்கள் மேற் கொண்டாலும் சரியே, அவர்கள் முக்தியை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. மனு, அவருக்கு முன்பே ஸ்மிருதி, நாரத பரிவ்ராஜ கோபநிஷத் போன்ற ஸ்ருதிகள் கூட இதைப் பரிசீலித்துள்ளன. தர்மங்களை தவறாது கடைப்பிடிக்கும் கிருஹஸ்தனே உத்தமமான மனிதன் என்று அவைகள் கூறுகின்றன. மற்றும் சில புனித நூல்களில் கூட, "எல்லாம் பற்றுகளையும் விட்டு விட்டவர்களே வணக்கத்துக்கு உரியவர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் ஆதாரமான கிருஹஸ்தாசிரமத்தை ஏற்றுக்கொள்ளுவதா அல்லது வணக்கத்துக்குரிய சன்னியாச ஆசிரமத்தை மேற்கொண்டு நிவ்ருத்தி மார்க்கத்தில் செல்லுவதா என்ற ஐயப்பாடு சிலருக்குத் தோன்றலாம். பரம பவித்திரமான கிருஹஸ்தாசிரமத்தை மேற்கொண்டவர்களுக்கும் எல்லாவற்றையும் துறந்த பரமஹம்சர்களுக்கும் தொடர்பு உண்டு. எந்த ஆசிரமத்தை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம். அதில் தவறில்லை; துன்பம் இல்லை . நான்கு ஆசிரமங்களிலும் உள்ளவர்கள், அவர்களுடைய தர்மங்களைத் தவறின்றிக் கடைப்பிடித்து ஒழுகினால் வீடுபேறு அடைவது உறுதி.

வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட நிலையில், அந்த நிலைக்கு தகுந்த ஆசிரமங்களை மேற்கொள்வது சிறப்பு. தான் அநுசரிக்கும் தர்மங்களை முழு மனத்தோடு, வழி மாறாமல் செய்து வருவார்களேயானால் எல்லா ஆசிரமங்களும் பவித்திரமானவைகளே, சிறப்புமிக்கவைகளே, முக்கியத்துவம் வாய்ந்தவைகளே. இதுவே சாஸ்திரங்கள் கூறும் உறுதிமொழி. ஆத்ம ஞானம் பெற்றவர்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து மீட்சியைப் பெறுவார்கள் என்பது தெளிவு. உயர்ந்த குலத்தில், வம்சத்தில் பிறந்திருந்தாலும் சரி, படித்தவனானாலும் பாமரனானாலும் சரி, பரமஹம்சரானாலும் சரியே, தன் தர்மங்களைக் கைவிட்டவர்கள், விரதங்களையும், வேதங்களையும், கீதை, உபநிஷத் ஆகியவைகளைப் பாராயணம் செய்வதை நிறுத்தி விட்டவர்கள், தியானம், வழிபாடு போன்ற கடமைகளைச் செய்யாதவர்கள் நிச்சயமாகத் துன்புறுவார்கள். உலகியல் கடமைகளை மட்டும் அநுசரிப்பவர்கள் துன்பத்தை அனுபவித்தே ஆக வேண்டும்.

ஒருவன் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளில் ஆர்வம் காட்டித் தவறாது செய்வதைக் காட்டிலும் சிறந்த செயலோ, தவமோ, தர்மமோ வேறில்லை. உபநிஷத்துகளின் சாரமான கீதை இதைப் பற்றி என்ன சொல்லுகிறது தெரியுமா?

எந்த ஆசிரமத்தை மேற்கொண்டிருந்தாலும் சரி, எந்த இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, ஏற்றுள்ள கடமைகளை முயற்சியோடு செய்து கொண்டிருந்தால் போதும் என்கிறது. மனுவும் இதையே உறுதிப்படுத்துகிறார். அறவழியில் மாறாது செல்பவர்கள், "விஞ்ஞானி" களாகி இறைவனை வந்திப்பார்கள் என்கிறார் மனு.

எந்த மனிதனின் எல்லா ஆசைகளையும் விட்டு, புலனாசைகளை மறந்து, எப்பொழுதும் பிரம்ம தத்துவத்தில் மூழ்கியிருப்பானோ, அவனே விஞ்ஞானி. அப்படிப்பட்ட விஞ்ஞானியை எந்தத் துன்பங்களும் தீண்டாது. அவன் உள்ளத்தில் எப்பொழுதும் ஆனந்தமும் அமைதியும் குடி கொண்டிருக்கும். ஒரு மனிதன் தன் அந்திய காலத்திலாவது பிரம்மத்தைத்

தேடுவானானால், அவன் நிச்சயமாக இறைவனின் ஐக்கியமாவான் என்பதில் ஐயமில்லை .

ஸ்திதப் பிரக்ஞனுடைய இயல்புகளும் இதைப் போன்றதே. பிரம்மமும் மனிதனும் ஒருவரே என்ற மனநிலையே சிறந்த மருந்து. அதுவே முக்தியை அளிப்பது. அதுவே மனிதனின் உண்மையான தர்மம். மந்த புத்தியுள்ள அஞ்ஞானி, தேகமே 'நான்' என்ற எண்ணத்திலாழ்ந்திருப்பான். சிறிதளவாவது விவேகமும் விசாரணையும் பெற்ற பண்டிதன், உடலினுள் இருக்கும் ஜீவனே தான் என்று அறிவான். மேலும் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், உடலிலிருந்து ஆத்மாவைப் பிரித்துணரும் ஞானம் பெற்ற மகான்கள் பிரம்மமும் தாம் ஒருவரே என்று உணர்வார்கள். அந்தத்தத்துவத்திலேயே எப்பொழுதும் மூழ்கி இருப்பார்கள்.

பிராமணன் போன்ற இனப் பாகுபாடுகள், கறுப்பு, வெளுப்பு என்ற நிற வித்தியாசங்கள், பிரம்மச்சரியம் போன்ற ஆசிரமங்கள் ஆகிய அனைத்தும் உடலைப் பற்றிய தர்மங்களே. அவைகள் ஆத்மதர்மம் அல்ல. காலம், இடம் இவைகளைப் பொறுத்துத் தர்மங்கள் மாறுதலுக்கு உட்படுகின்றன. இந்தத் தர்மங்கள் உலக நியதிகளுக்காக இறைவனின் சங்கல்பத்தால் உண்டானவைகள். இவைகளை ஒவ்வொரு மனிதனும் அநுசரித்தேயாக வேண்டும். உலகத் தொடர்பு அற்றவர்கள், அதாவது பற்றுதலைக் களைந்தவர்கள் இந்நியதிகளைக் கையாள வேண்டியதில்லை. அதனால்தான் பிரம்மஞானம் பெற்றவர்கள் இவைகளைப் பொருட்படுத்துவதில்லை . அவர்கள் ஜாதி, மதக் கட்டுப்பாடுகளைக் கடந்தவர்கள். அவர்களுக்கு அனைத்தும் பிரம்ம தத்துவமாகவே காணப்படும். ஆனால், அந்த நிலைக்கு வரும்வரை பிரிவு, ஆசிரமம் ஆகிய நியமங்களைக் கையாள வேண்டியது அவசியம். இது தேக தர்மம்.

சத்தியத்தை உணர்ந்த ரிஷிகள், ஆத்மதர்மங்களான சத் சித் ஆனந்தம் எனப்படும் மூவகைக் குணங்களையே ஆத்மாவின் இயல்புகள் என்று நிர்ணயித்தனர். அந்த உத்தம விஞ்ஞானிகள் சச்சிதானந்த பரப்பிரம்மத்தை அடைந்தனர். முக்தியைப் பெற ஆத்ம சுத்தம் அவசியம். ஜாதியும் நிறமும் காரணமல்ல ஆனால் ஆத்மசுத்தம் தர்ம

நியதிகளைக் கையாளுவதைப் பொறுத்தே ஏற்படுகிறது. தர்மங்களுக்கு ஜாதியும், நிறமும் முக்கியமே. அவரவர்களின் தர்மங்களை அநுசரிப்பதன் மூலம் ஆத்ம சுத்தமும், ஆத்ம சுத்த மூலமாக மோட்சமும் பெறப்படுகிறன. மோட்சத்துக்கும் ஜாதியும் நிறமும் முக்கியமல்லவாயினும், ஆத்ம சுத்தத்துக்கு நியமங்கள் அதி முக்கியம். நியமங்கள் மூலம் அனுபவம், அனுபவம் மூலம் சத்தியத்தை அறிவதும் சாத்தியமாகிறது. சத்தியத்தின் மூலம் புனிதத்தன்மையை, புனிதத் தன்மையால் மோட்சமும் சித்திக்கிறது. இப்படிப் பட்ட ''சுத்த ரூப மனத்தத்துவம்" உள்ள மனிதர்கள் எந்த ஆசிரமத்தை அநுசரித்தாலும், எந்த ஜாதி, இன பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் சரியே, விஞ்ஞானத்துக்கு வேண்டிய ஆத்ம சுத்தம் பெற்றிருந்தால் நிச்சயம் முக்தி பெறுவார்கள். இதையே சாஸ்திரங்களும் கூறுகின்றன. விருப்பு, வெறுப்பு உடையவர்கள் வீட்டில் வாழ்ந்தாலும் கூட அவர்களால் தப்பிக்க முடியாது. புலன்களை வென்றவர்கள் கிருஹஸ்தாசிரமத்தில் இருந்த போதிலும், அவர்களைக் தவசிகள் என்றே சொல்லலாம். எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல்களில் ஈடுபடுபவர்கள், எங்கே இருந்த போதிலும், அவர்கள் ஞானிகளே. மீட்சியைப் பெறுவதற்காகக் காட்டுக்குப் போக வேண்டியதில்லை. அவர்கள் வீடே தபோவனம். சந்ததிகள் மூலமாகவும், தான தர்மம், யாக யக்ஞங்கள் மூலமாகவும் முக்தியைப் பெற முடியாது. ஆத்ம சுத்தி ஒன்று இருந்தால் போதும். அதை எளிதில் பெற்றுவிடலாம்.

தான் இயற்றும் அறங்கள் சரியானதா, தவறானதா என்பதைச் சாஸ்திரங்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பிரம்மச்சாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி - இவர்களில் யாராயிருந்த போதிலும் சரி, எந்த வழியைப் பின் பற்றுபவர்களாயினும் சரியே. நிரந்தரம் சுயம் பிரகாசமான பிரம்மத்தை தரிசிக்கக் கூடிய பிரம்ம திருஷ்டியைப் பெற்றிருந்தால் சுலபமாக முக்தியைப் பெறலாம்.

ஆத்ம திருஷ்டியே மோட்சத்துக்குத் காரணம். வேதங்களின் பொருளை உணர்ந்து, தர்மத்தைத் தவறாது அநுசரிப்பானேயாகில், அவன் எந்தச் சாதியைச் சேர்ந்தவனாயினும் சரி பரமபதத்தைப் பெறுவான். கிருஹஸ்தாசிரம தர்மத்தில் ஈடுபட்டவர்கள், சாஸ்திரங்களின் அறிவுரைப்படி எல்லா அறங்களையும் அநுசரிப்தற்கான சக்தியையும், ஞானத்தைப் பெறும்

சக்தியையும் உடையவர்காளானால், சன்னியாசத்தை மேற்கொள்ளாமலேயே மீட்சியைப் பெறலாம். கிருஹஸ்தாசிரம தர்மங்களைக் கவனமாகப் பின்பற்றி, சுய தர்மத்தையும் விட்டு விடாமல் நிறைவேற்றி வந்தால், சர்வேசுவரனின் கிருபைக்குப் பாத்திரமாகி, ஆன்மிகப் பாதையில் நேரும் தடைகளை அந்த அருளால் போக்கிக் கொண்டு முன்னேறுவார்கள். ஜனகர், அஸ்வபதி, திலீபமகாராஜா ஆகியவர்கள் கிருஹஸ்த ஆசிரமத்தில் இருந்து கொண்டே முக்தியைப் பெற்றவர்கள்.

கிருஹஸ்தாசிரமம் வீடுபேற்றை நல்குமா, இல்லையா என்ற ஐயப்பாடே வேண்டியதில்லை. சம்சார சாகரத்தைக் கடக்க வேண்டும் என்ற ஒரே மாதிரியான எண்ணம் கணவன் மனைவி இருவருக்கும் தோன்ற வேண்டும். அவர்கள் தங்கள் தர்மங்களைச் சிரத்தையாக அனுசரித்து வந்தால் இருவரும் வீடுபேற்றை எய்தலாம். அவர்கள் இருவரின் நினைவும் ஒரே மாதிரியானதாக, உறுதியானதாக இருக்க வேண்டும். அப்படி இல்லாத இடத்துச் சன்னியாசத்தைச் சரணடைவதே நல்லது. சூரியன் கூட நடுபகலில் தன்தர்ம பத்தினியான சாயாதேவியோடு இணைந்து காட்சி தருகிறான். பதினாறு கலைகளையுடைய சந்திரனும் அமிர்தம் போன்ற குளிர்ச்சி பொருந்திய தன் நிலவுக் கதிர்களோடு இணைந்து நிற்கிறான். குடும்பத்தலைவி சாந்தி, பொறுமை, சீலம் ஆகிய நற்பண்புகளோடு, புன்சிரிப்புத் தவழும் முகத்தோடு இருந்தால் அந்த வீடே ஒளிபொருந்தியதாகிவிடும். அந்த தம்பதிகளுக்கு ஆன்மிக உலகில் வெற்றி நிச்சயம்.

கிருஹஸ்தனுக்கு ஆன்மிகப் பாதையில் தடைகள் நேருவது இயற்கை. பரிபூரண வைராக்கியம் இருந்தால் அவன் துறவை மேற்கொள்ளலாம். அப்பொழுதும் கூட மனைவியின் முழுச் சம்மதம் இருந்தாலொழிய துறவறத்தின் பலனை அடைய முடியாது அல்லது கணவன் மனைவி இருவருமே வீட்டை விட்டு வெளியேறி வானப்பிரஸ்தம் மேற்கொள்ளலாம். வயது நிரம்பாத குழந்தைகள் இருந்தால் வானபிரஸ்தத்தை மேற்கொள்ளக் கூடாது என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தக் குழந்தைகளுக்கு தக்க பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் பின்னர் வானப்பிரஸ்தம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தடைகள் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் கிருஹஸ்த தர்மத்தை நாற்பத்தியெட்டு வயதுவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. அறவழியில் தடைகள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படியும் ஏற்பட்டுவிட்டால், அதை இறைவனிடம் ஒப்படைத்து விட்டு அமைதி பூண வேண்டும். இவ்வாறு கிருஹஸ்த ஆசிரமத்தை ஏற்று, முயன்று முடிக்க வேண்டும். கிருஹஸ்தம் தர்மம் ஆண் பெண் இருவருக்கும் பொதுவானதே.